# IN THE COURT OF ADDITIONAL DISTRICT JUDGE, TENKASI.

**Date** : **12.11.2025**

**MCOP No.** : **211/2022**

**Pw** : **1**

**Name** : **திருமதி. உஷாவாணி**

சாட்சி இன்று மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்குவிசாரணை செய்ய அனுமதிக்கப்படுகின்றார்.

**1,2 ம் எதிர்மனுதாரர்கள் தரப்பில் குறுக்குவிசாரணை**

வழக்கறிஞருக்கு விபத்து சம்பந்தமான விவரங்களை சொன்னது யார் என்றால் நான்தான். 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையை நான் படித்துப்பார்க்கவில்லை. அதில் குறிப்பிடப்பட்டுள்ள சங்கதிகளை மறுதலிக்கும் விதமாக நான் ஆவண சாட்சியம் முன்னிடவில்லை என்றால் சரியல்ல. நான் விபத்தை நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான். எனது அப்பா ஓட்டி சென்ற வாகனத்தின் பின்பக்கம் வந்த வாகனம் மோதி விபத்து ஏற்பட்டது. அந்த சமயத்தில் எனது அப்பாவிற்கு முறையான ஓட்டுநர் உரிமம் கிடையாது என்றால் சரியல்ல. அவருக்கு ஓட்டுநர் உரிமம் உள்ளது. அதன் நகலை இதுநாள் வரை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

விபத்து சம்பந்தமாக காவல் நிலையத்தில் நான்தான் புகார் கொடுத்தேன். அதன் அடிப்படையில் முதல் தகவல் அறிக்கை பதிவுசெய்யப்பட்டு, குற்ற இறுதி அறிக்கையும் தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். அதில் எனது அப்பாவிற்கு இடது பக்க தோள்பட்டையில் எலும்பு முறிவு கொடுங்காயம் ஏற்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனது தகப்பனார் ரோஸ் மேரி மருத்துவமனையில் மேற்படி காயத்திற்கு சிகிச்சை பெற்ற ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றும், அந்த மருத்துவ சிகிச்சை குறிப்பு ஆவணங்களிலும் எனது தகப்பனாருக்கு தோள்பட்டையில் எலும்பு முறிவு என்றுதான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். குற்றாலம் காவல்

நிலையத்தில் உரிய முறையில் விசாரணை நடைபெறவில்லை என கூறியுள்ள நிலையில் அதுகுறித்து நான் உரிய மேல்நடவடிக்கை எடுத்ததற்கான ஆவணங்கள் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது தந்தையின் மரணத்திற்கு என்ன காரணம் என்பதை கண்டறியக்கூடிய பிரேத பரிசோதனை அறிக்கையை நீதிமன்றத்தில் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான், அது கொரோனா காலக்கட்டம் என்பதால் பிரேத பரிசோதனை செய்யப்படவில்லை. 15.04.2021 ஆம் தேதி ஏற்பட்ட காயங்களால் 17.05.2021ம் தேதி எனது அப்பா இறந்துவிட்டதாக நான் கூறுவது ஏற்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. 1, 2 எதிர்மனுதாரர்களை பொறுத்து மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல. இவ்வழக்கில் காப்பீடு விதிமீறல் எதுவும் கிடையாது என்பதால் எனக்கு ஏதேனும் இழப்பீடு வழங்கவேண்டும் என்றால் 3ம் எதிர்மனுதாரர் தான் அதை வழங்கவேண்டும் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

**<u>3,4ம் எதிர்மனுதாரர்கள் தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

வழக்கறிஞருக்கு விபத்து சம்பந்தமான விவரங்களை சொன்னது யார் என்றால் நான்தான். 3ம் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையை நான் படித்துப்பார்க்கவில்லை. அதில் குறிப்பிடப்பட்டுள்ள சங்கதிகளை மறுதலிக்கும் விதமாக நான் ஆவண சாட்சியம் முன்னிடவில்லை என்றால் சரியல்ல. நான் விபத்தை நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான். எனது அப்பா ஓட்டி சென்ற வாகனத்தின் பின்பக்கம் வந்த வாகனம் மோதி விபத்து ஏற்பட்டது. அந்த சமயத்தில் எனது அப்பாவிற்கு முறையான ஓட்டுநர் உரிமம் கிடையாது என்றால் சரியல்ல. அவருக்கு ஓட்டுநர் உரிமம் உள்ளது. அதன் நகலை இதுநாள் வரை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

விபத்து சம்பந்தமாக காவல் நிலையத்தில் நான்தான் புகார் கொடுத்தேன். அதன் அடிப்படையில் முதல் தகவல் அறிக்கை பதிவுசெய்யப்பட்டு, குற்ற இறுதி அறிக்கையும் தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். அதில் எனது அப்பாவிற்கு இடது பக்க தோள்பட்டையில் எலும்பு முறிவு கொடுங்காயம் ஏற்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனது தகப்பனார் ரோஸ் மேரி மருத்துவமனையில் மேற்படி காயத்திற்கு சிகிச்சை பெற்ற ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றும், அந்த மருத்துவ சிகிச்சை குறிப்பு ஆவணங்களிலும் எனது தகப்பனாருக்கு தோள்பட்டையில் எலும்பு முறிவு என்றுதான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். குற்றாலம் காவல்

நிலையத்தில் உரிய முறையில் விசாரணை நடைபெறவில்லை என கூறியுள்ள நிலையில் அதுகுறித்து நான் உரிய மேல்நடவடிக்கை எடுத்ததற்கான ஆவணங்கள் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது தந்தையின் மரணத்திற்கு என்ன காரணம் என்பதை கண்டறியக்கூடிய பிரேத பரிசோதனை அறிக்கையை நீதிமன்றத்தில் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான், அது கொரோனா காலக்கட்டம் என்பதால் பிரேத பரிசோதனை செய்யப்படவில்லை. 15.04.2021 ஆம் தேதி ஏற்பட்ட காயங்களால் 17.05.2021ம் தேதி எனது அப்பா இறந்துவிட்டதாக நான் கூறுவது ஏற்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. எனவே எனது அப்பாவின் இறப்பிற்கான காரணத்தை காட்டக்கூடிய எந்த ஆவணத்தையும் தாக்கல் செய்யாததால் 2 ம் எதிர்மனுதாரரை ஈட்டுறுதி செய்து 3ம் எதிர்மனுதாரர் எனக்கு எந்த இழப்பீடும் வழங்கவேண்டியதில்லை என்று சொன்னால் சரியல்ல. 17.05.2021 அன்று எனது தந்தை இறந்ததை குறித்து காவல் துறையில் விபத்து காயங்களால் அவர் இறந்துவிட்டதாக புகாரில் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. எனது அப்பாவின் வயது, வேலை, வருமானம் ஆகியவற்றை மிகைப்படுத்தி கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. விபத்து காயங்களால் எனது தந்தை இறக்கவில்லை என்றும், 3, 4 எதிர்மனுதாரர்கள் எனக்கு எந்தவித இழப்பீடும் வழங்கவேண்டியதில்லை என்றும், அவர்களை பொறுத்து மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

MANOJKUMAR S

Digitally signed by MANOJKUMAR S
Location: Additional District and Sessions Judge, Tenkasi